# வாச்சாத்தி வழக்கு: 215 பேருக்கும் தண்டனை

## உறுதி செய்தது உயர்நீதிமன்றம் | 18 பெண்களுக்கு தலா ரூ.10 லட்சம்

**சென்னை, செப். 29:** வாச்சாத்தி வன்கொடுமை வழக்கில் குற்றவாளிகளின் மேல்முறையீட்டு மனுக்களைத் தள்ளுபடி செய்த சென்னை உயர்நீதிமன்றம், 215 பேருக்கும் விதிக்கப்பட்ட தண்டனையை உறுதி செய்தது. மேலும், பாதிக்கப்பட்ட 18 பெண்களுக்கு இழப்பீடாக தலா ரூ.10 லட்சம் வழங்கவும் உத்தரவிட்டது.

தருமபுரி மாவட்டம் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி நகரங்களுக்கு இடையில் கல்வராயன் மலைத்தொடரின் அடிவாரப் பகுதியில் அமைந்துள்ளது வாச்சாத்தி கிராமம்; இங்கு சந்தனமரக் கடத்தல் தொடர்பாக 1992 -இல் நிகழ்ந்த வன்முறை, பாலியல் வன்கொடுமை வழக்கில் 215 பேருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், தண்டனைக்கு எதிரான மேல்முறையீட்டு மனுக்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தன. மனுக்களை விசாரித்த நீதிபதி பி.வேல்முருகன், அவற்றைத் தள்ளுபடி செய்ததுடன் தருமபுரி மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதி செய்வதாகக் கூறினார்.

**தீர்ப்பு விவரம்:** குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் குற்றச் செயல்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன. எனவே, குற்றவாளிகளின் மேல்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. பாதிக்கப்பட்ட



**வாச்சாத்தி கிராமத்தில் நிகழ்த்தப்பட்ட வன்கொடுமை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தலா ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். இந்த இழப்பீட்டுத் தொகையில் 50 சதவீதத்தை பாலியல் வன்கொடுமை செய்த குற்றவாளிகளிடமிருந்து பெற வேண்டும்.**

**—நீதிபதி பி.வேல்முருகன்.**

வாச்சாத்தி கிராமத்தில் மேம்பாட்டுப் பணிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அந்த கிராமத்தை முன்னேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

**குற்றவாளிகளிடமிருந்து...:** வாச்சாத்தி கிராமத்தில் நிகழ்த்தப்பட்ட வன்கொடுமை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தலா ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். இந்த இழப்பீட்டுத் தொகையில் 50 சதவீதத்தை பாலியல் வன்கொடுமை செய்த குற்றவாளிகளிடமிருந்து பெற வேண்டும்.

**அரசுப்பணி அல்லது தொழில் தொடங்க வசதி:** பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சிகிச்சை அளிப்பதில் அலட்சியம் காட்டப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது; எனவே, சிகிச்சை அளிக்கத் தவறியவர்களிடமிருந்தும் இழப்பீட்டுத் தொகை பெறப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களது குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்க வேண்டும்; அதற்கு வாய்ப்பு இல்லாத நிலையில், சுய தொழில் தொடங்க வசதிகள் செய்து தர வேண்டும்.

வாச்சாத்தி சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அனைத்து நபர்களின் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதைய ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், வனத்துறை அதிகாரி மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஏற்கெனவே சிறைத் தண்டனை அனுபவித்திருந்தால் அதற்கேற்ப மீதமுள்ள காலத்துக்கும் தண்டனை அனுபவிக்க வகை செய்ய வேண்டும் எனத் தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

**வழக்கின் பின்னணி என்ன?**
(செய்தி உள்ளே)

# 10 கலைமாமணி விருதாளர்களுக்கு தலா ரூ.1 லட்சம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, செப். 29:** ஏழ்மையில் வாழும் பத்து கலைமாமணி விருதாளர்களுக்கு தலா ரூ.1 லட்சம் ரொக்கத் தொகையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

கலைமாமணி விருது பெற்றவர்களில் மிகவும் ஏழ்மையில் வாழும் 10 பேருக்கு ரொக்கத் தொகையாக ரூ.1 லட்சம் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்திருந்தது.

அதன்படி, 2022-23-ஆம் ஆண்டுக்கு 10 பேர் தேர்வு செய்யப்பட்டனர். கே.கல்யாணசுந்தரம், ச.சமுத்திரம், என்.பார்வதி உதயம், கே.குமரவேல், பா.முத்துசந்திரன், கோ.முத்துலட்சுமி, பி.ஆர்.துரை, ரா.கல்யாணசுந்தரம், எம்.எஸ்.முகமது மஸ்தான், டி.என்.வரலட்சுமி ஆகியோருக்கு தலா ரூ.1 லட்சம் அளிக்க முடிவு செய்யப்பட்டது.



தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில், ஏழ்மை நிலையில் உள்ள 10 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழியாக தலா ரூ.1 லட்சத்துக்கான காசோலைகளை சென்னை தலைமைச்செயலகத்தில் வெள்ளிக்கிழமை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா உள்ளிட்டோர்.

அவர்களில் ஆறு பேருக்கு, சென்னை தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வின் போது, முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

**500 கலைஞர்களுக்கு நிதி:** தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு செய்யப்பட்ட 500 பேருக்கு இசைக் கருவிகள், ஆடை, அணிகலன்கள் வழங்க தலா ரூ.10 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.50 லட்சம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 5 பேருக்கு நிதியுதவிக்கான காசோலைகளை முதல்வர் அளித்தார்.

**ஆயிரம் கலைஞர்களுக்கு...** நலிந்த நிலையில் வாழும் ஆயிரம் மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.3,000 வழங்கப்படவுள்ளது. கடந்த ஏப்.1 முதல் இந்தத் தொகை அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. ஆயிரம் கலைஞர்களில் நான்கு பேருக்கு மாதாந்திர நிதியுதவிக்கான காசோலைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத் தலைவர் வாகை சந்திரசேகர், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் க.மணிவாசகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# வேளாண் வேள்வி!

இந்தியா சுதந்திரம் அடையும்போது மக்கள்தொகை வெறும் 40 கோடி. அடுத்த 20 ஆண்டுகளில் அது ஏறத்தாழ இரட்டிப்பாகியிருந்தது. 1949 – 50–இல் இந்தியா 30 லட்சம் டன் உணவு தானியங்களை இறக்குமதி செய்து கொண்டிருந்தது. 1962–இல் சீன ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, ராணுவ படுதோல்வி மட்டுமல்லாமல், பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டது இந்தியா. வெளியில் சொல்லப்படாமல் இந்தியாவில் பட்டினி மரணங்கள் பல பகுதிகளில் நடந்து கொண்டிருந்தன. இந்தப் பின்னணியின் அடிப்படையில்தான் எம்.எஸ்.சுவாமிநாதன் என்கிற வேளாண் விஞ்ஞானியின் பங்களிப்பை நாம் மதிப்பிட வேண்டும்.

திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியிலும், கோவை வேளாண் கல்லூரியிலும் படித்துப் பட்டம் பெற்றார் எம்.எஸ். சுவாமிநாதன். இந்திய ஆட்சிப் பணியில் சேர வேண்டும் என்பதுதான் தாயாரின் விருப்பம். அதற்கான தேர்விலும் கலந்துகொண்டார். வேளாண் மேற்படிப்புக்காக நெதர்லாந்தில் ஆய்வு மேற்கொண்டிருந்த நிலையில், இந்தியாவிலிருந்து அவர் இந்திய காவல் பணிக்கு தேர்வு செய்யப்பட்டிருப்பதாக தகவல் வந்தது. விவரம் தெரிவித்தபோது, நெதர்லாந்தில் இருந்த பேராசிரியர், 'நீங்கள் இந்தியாவுக்குப் போய் காக்கிச் சட்டை அணிந்த காவல் துறை அதிகாரியாக இருப்பதற்குப் பிறக்கவில்லை. உங்களது வேளாண் ஆராய்ச்சியைத் தொடருங்கள்' என்று தீர்மானமாகத் தெரிவித்துவிட்டார். இந்தியாவின் வேளாண் புரட்சிக்கு முகம் தெரியாத நெதர்லாந்து பேராசிரியரின் பங்களிப்பை இப்போது நினைவுகூரத் தோன்றுகிறது.

மத்திய வேளாண் துறை அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம், மத்திய வேளாண் துறை செயலராக இருந்த பி. சிவராமன், சமீபத்தில் நம்மை விட்டுப் பிரிந்திருக்கும் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் மூவரும் துணிந்து எடுத்த சில முடிவுகளால்தான், இந்தியா உணவு உற்பத்தியில் இப்போது தன்னிறைவு பெற்றிருப்பது மட்டுமல்லாமல், உலக உணவுச் சந்தையில் மிக அதிகமாக ஏற்றுமதி செய்யும் (45%) நாடாக இந்தியா இருந்து வருகிறது.

அவர்கள் மூன்று பேரும் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியிடம் ஒரு கோரிக்கையை வைத்தனர். வெளிநாட்டிலிருந்து குறைந்த காலத்தில் அதிக அளவு விளைச்சல் தரும் அரிசி, கோதுமை ரகங்களின் விதைகளை இறக்குமதி செய்ய அனுமதி கோரினார்கள். 'நமது தேவைக்கான அரிசியையும் கோதுமையையும் வாங்குவதற்கே அந்நியச் செலாவணி இல்லாத நிலையில், விதைகளை வாங்குவதா?' என்று கேள்வி எழுப்பினார் பிரதமர் சாஸ்திரி. அமைச்சர் சி. சுப்பிரமணியத்தின் வற்புறுத்தலுக்கு இணங்கி எம்.எஸ். சுவாமிநாதனின் கோரிக்கையான 250 டன் கோதுமை விதையை இறக்குமதி செய்ய பிரதமர் அனுமதித்தார்.

EVA STALIN IAS ACADEMY

ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பை, 15 பிரிவுகளாகப் பிரித்து அந்த விதைகள் பரிசோதனையாக பயிரிடப்பட்டன. வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனும் அவரது குழுவினரும் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இரவு பகல் பாராது உழைத்து பல்வேறு சோதனைகளை மேற்கொண்டனர்.

பிரதமர் சாஸ்திரியின் மரணம், மிகப் பெரிய பின்னடைவு. அப்போது அமெரிக்கா பி.எல். 480 என்கிற ஒப்பந்தத்தின் கீழ், இந்தியாவுக்கு 40 லட்சம் டன் கோதுமையை உதவியாக வழங்கி வந்தது. அந்த உதவியைக் காரணம் காட்டி, இந்தியாவை தனது கட்டுப்பாட்டுக்குள் வைக்க நினைத்தது அமெரிக்கா.

ஒருநாள் வேளாண் ஆராய்ச்சி குறித்த கூட்டம் முடிந்த பிறகு, அப்போது இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக இருந்த எம்.எஸ். சுவாமிநாதனை பிரதமர் இந்திரா காந்தி அழைத்தார்.

'சுவாமி, நீங்கள் புதிய ரக கோதுமைக்கான அனுமதி கேட்டிருக்கிறீர்கள். அடுத்த சில ஆண்டுகளில் நமது தேவைக்கு அதிகமாக ஒரு கோடி டன் உற்பத்தியை எட்ட முடியும் என்று உங்களால் உறுதி அளிக்க முடியுமா? நம்மை மிரட்டிக் கொண்டிருக்கும் அமெரிக்கர்களின் பிடியில் இருந்து வெளியேற நான் விரும்புகிறேன்' என்பதுதான் பிரதமர் இந்திரா காந்தி, சுவாமிநாதனிடம் வைத்த கோரிக்கை. அவர் அதை ஏற்றார். அதன் பயனைத்தான் இன்று இந்தியா அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

சுப்பிரமணியம் – சிவராமன் – சுவாமிநாதன் என்கிற மூவர் அணி, இந்தியாவின் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டது என்றால், அதை செயல்படுத்திய பெருமை சுவாமிநாதனுடையது. வேளாண் பரப்பை அதிகப்படுத்தாமல், உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்பதை நிரூபித்தார் அவர்.

விவசாய நிலப்பரப்பு ஒருபுறம் குறைந்துகொண்டு வரும்போது, இன்னொருபுறம் மக்கள்தொகை பெருகி வருகிறது. அதனால், உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது. கூடுதல் விளைச்சல் மூலம் தான் இதை எதிர்கொள்ள முடியும் என்பதால், அவர் சில மாற்றங்களை நடைமுறைப்படுத்தினார்.

கலப்பின ரகங்களையும், ரசாயன உரங்களையும் பயன்படுத்தி உற்பத்தியை பெருக்குவதன் மூலம் மட்டுமே விவசாயத்தை லாபகரமாக்க முடியும் என்பதை அவர் நிரூபித்தார். இது குறித்து பல விமர்சனங்கள் எழுப்பப்பட்டாலும், எம்.எஸ். சுவாமிநாதனின் வழிமுறைகள் ஏற்படுத்திய மாற்றம் இந்தியாவை பட்டினிச் சாவுகளிலிருந்து மீட்டெடுத்து, உணவு உற்பத்தியில் தன்னிறைவை ஏற்படுத்தியதை யாரும் மறுக்க முடியாது.

இப்போது நாம் சாப்பிடும் ஒவ்வொரு சோற்றுப் பருக்கையிலும், 'எம்.எஸ். சுவாமிநாதன்' என்பவரின் பங்களிப்பு இருக்கிறது. விவசாயியின் விளை பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்படுவது எம்.எஸ். சுவாமிநாதனின் பங்களிப்பு என்பதை நாம் உணர வேண்டும்.

பத்மஸ்ரீ, பத்ம பூஷண், பத்ம விபூஷண் விருதுகள் வழங்கப்பட்டிருக்கும் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனுக்கு வழங்கப்பட வேண்டிய விருது 'பாரத ரத்னா'!

# தமிழகத்தில் ரூ.57 கோடியில் மீன் இறங்குதளங்கள் திறப்பு

**சென்னை, செப் 29:** தமிழகத்தில் ரூ.56.95 கோடியில் புதிதாக அமைக்கப்பட்ட மீன் இறங்குதளங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி மூலம் வெள்ளிக்கிழமை திறந்துவைத்தார்.

கன்னியாகுமரி மாவட்டம் குறும்பனை, தஞ்சாவூர் மாவட்டம் கீழத்தோட்டம், சேதுபவாசத்திரம் மீனவ கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர், புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம், புதுக்குடி கிராமம் ஆகிய இடங்களில் ரூ.56.95 கோடியில் புதிதாக மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் தமிழகத்தில் 6 இடங்களில் புதிய மீன் இறங்குதளங்கள் மற்றும் திட்டப் பணிகளை, சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி மூலம் வெள்ளிக்கிழமை திறந்துவைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், எஸ்.ரகுபதி, தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா உள்ளிட்டோர்.

இதேபோல, நாகை மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்துக்குள்பட்ட பொறியியல் கல்லூரியில் மாணவர், மாணவியர் விடுதிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மீன்வளத் துறை சார்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இந்த கட்டமைப்புகளை முதல்வர் ஸ்டாலின் திறந்துவைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், எஸ்.ரகுபதி, மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# '2029 முதல் ஒரே நாடு ஒரே தேர்தல்': சட்ட விதிகள் வகுக்கும் பணி தீவிரம்

**புது தில்லி, செப்.29:** மக்களவை, பேரவைகளுக்கு 2029 ஆம் ஆண்டு முதல் ஒரே தேர்தல் நடத்தும் வகையில், இந்திய சட்ட ஆணையம் சட்ட விதிகளை வகுக்கும் பணியை தீவிரமாக மேற்கொண்டு வருவதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாவது:

மக்களவை, சட்டப்பேரவைகள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் மத்திய அரசு உயர்நிலைக் குழு அமைத்துள்ளது.

இதற்கான சட்ட நுணுக்கங்களை இந்திய சட்ட ஆணையமும் ஆராய்ந்து வருகிறது.

மக்களவை, சட்டப்பேரவை, உள்ளாட்சித் தேர்தல் என அனைத்துக்கும் ஒரே வேட்பாளர் பட்டியலை தயாரிப்பது குறித்து இந்திய தேர்தல் ஆணையம் ஆய்வு செய்து வருகிறது. தற்போது தேர்தல் ஆணையமும் மாநில தேர்தல் ஆணையங்களும் தனித் தனி வேட்பாளர் பட்டியலை வைத்துள்ளன. இந்த நடவடிக்கையால் செலவு, பணிச் சுமை குறையும்.

முதலில் மக்களவையுடன், பேரவைத் தேர்தல்கள் ஒன்றாக நடத்துவதற்காக சில மாநிலங்களின் ஆட்சிக் காலத்தை கூட்டியும் குறைக்கவும் செய்யலாம் என ஆணையம் பரிந்துரைக்கலாம்.

தற்போது பல்வேறு கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டு வருகிறது. இதனால் ஒரு வாக்காளர் வாக்குச்சாவடிக்கு ஒரு முறை மட்டுமே சென்று மக்களவை, சட்டப் பேரவைக்கான வாக்கைச் செலுத்தும் வகையில் திட்டமிடப்பட்டு வருகிறது.

முதல் கட்டமாக மக்களவை, சட்டப்பேரவைகளுக்கு ஒரே 2029-இல் தேர்தலை நடத்திய பின்னர் அதே ஆண்டில் அடுத்தகட்டமாக உள்ளாட்சிகளுக்கு தேர்தலை நடத்தலாம் என சட்ட ஆணையம் திட்டமிட்டு வருகிறது' என்று தகவல்கள் தெரிவித்தன.

மக்களவைக்கும், மாநில சட்டப் பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தலாம் என 2018-இல் சட்ட ஆணையம் அங்கீகரித்தது. அவ்வப்போது தேர்தல் நடத்தப்பட்டு வருவதால் நாட்டில் எப்போதும் தேர்தல் பணிகள் தொடர்கின்றன. ஒரே தேர்தல் குறித்து மக்களிடமும் கருத்துகளைக் கேட்க வேண்டும் என்றும் சட்ட ஆணையம் தெரிவித்திருந்தது.

# துப்பாக்கி சுடுதலில் இந்தியா பதக்க வேட்டை

## குண்டு எறிதலில் கிரண் பலியான் வரலாற்றுச் சாதனை










### துப்பாக்கி சுடுதல்

## ஆடவர் அணி உலக சாதனையுடன் தங்கம்

50 மீட்டர் ரைஃபிள் 3 பொசிஷன்ஸ் ஆடவர் அணிகள் பிரிவில் ஸ்வப்னில் சுரேஷ் குசேல், ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர், அகில் ஷியோரன் ஆகியோர் கூட்டணி உலக சாதனையாக 1,769 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து தங்கம் வென்றது. சீனா, தென் கொரியா அணிகள் முறையே வெள்ளி, வெண்கலம் பெற்றன. இப்பிரிவில் 2022-இல் அமெரிக்கா 1,761 புள்ளிகள் பெற்ற சாதனையை தற்போது இந்தியா முறியடித்துள்ளது. பின்னர், அதிலேயே தனிநபர் பிரிவில் ஐஸ்வரி பிரதாப் 459.7 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் வென்றார். சீன வீரர்களுக்கு தங்கம், வெண்கலம் கிடைத்தன. 10 மீட்டர் ஏர் பிஸ்டல் மகளிர் தனிநபர் பிரிவில் பாலக் குலியா 242.1 புள்ளிகளுடன் தங்கம் வெல்ல, ஈஷா சிங் 239.7 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் பெற்றார். பாகிஸ்தானுக்கு வெண்கலம் கிடைத்தது. அதிலேயே அணிகள் பிரிவில் பாலக் குலியா, ஈஷா சிங், திவ்யா சுப்பராஜு கூட்டணி 1,731 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் வென்றது. சீனாவுக்கு தங்கமும், சீன தைபேக்கு வெண்கலமும் கிடைத்தன.

### தடகளம்

## கிரண் பலியான் சாதனை

மகளிர் குண்டு எறிதல் இறுதிச் சுற்றில் இந்தியாவின் கிரண் பலியான் சிறந்த முயற்சியாக 17.36 மீட்டர் தொலைவுக்கு எறிந்து வெண்கலப் பதக்கம் பெற்றார். ஆசிய போட்டிகளின்

### டென்னிஸ்

## ராம்குமார்/சாகேத் இணைக்கு வெள்ளி

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதிச்சுற்றில் ராம்குமார் ராமநாதன்/சாகேத் மைனேனி இணை 4-6, 4-6 என்ற செட்களில் சீன தைபேவின் யு சியு சு/ஜேசன் ஜங் கூட்டணியிடம் வெற்றியை இழந்து வெள்ளிப் பதக்கம் பெற்றது.

### ஸ்குவாஷ்

## மகளிர் அணிக்கு வெண்கலம்




மகளிர் அணிகள் அரையிறுதியில் இந்தியா 1-2 என ஹாங்காங்கிடம் தோல்வி கண்டு வெண்கலப் பதக்கம் பெற்றது. இந்த டையில் தன்வி கன்னா, அனாஹத் சிங் தோற்க, ஜோஷ்னா சின்னப்பா மட்டும் வென்றார்.

இதனிடையே, ஆடவர் அணி தனது அரையிறுதியில் 2-0 என மலேசியாவை சாய்த்து இறுதிச்சுற்றுக்கு முன்னேறி, அதில் பாகிஸ்தானை சந்திக்கிறது.

முன்னதாக அரையிறுதி டையில், அபய் சிங், சௌரவ் கோஷல் அணிக்கு வெற்றி தேடித் தந்தனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# 40% இந்திய முதியோரின் வாழ்வாதாரம் கேள்விக்குறி!

**புது தில்லி, செப். 29:** இந்தியாவில் உள்ள முதியவர்களில் 40 சதவீதத்துக்கும் அதிகமானோர் ஏழ்மையானவர்களாகவும், அவர்களில் 18.7 சதவீதம் பேர் வருமானம் இல்லாமல் வாழ்ந்து வருவதும் 'மக்கள் தொகை நடவடிக்கைகளுக்கான ஐ.நா.சபை நிதியம்' அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரியவந்துள்ளது.

இந்திய முதியோர் மக்கள் தொகை தொடர்பாக மக்கள் தொகை நடவடிக்கைகளுக்கான ஐ.நா.சபை நிதியம் (யூஎன்எஃப்பிஏ) அமைப்பு மேற்கொண்ட ஆய்வு முடிவுகள், 'இந்திய முதியோர் அறிக்கை 2023' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

புது தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய சமூக நீதித் துறை செயலர் சௌரவ் கர்க் மற்றும் யூஎன்எஃப்பிஏ இந்திய நிர்வாகி ஆண்ட்ரியா எம்.வோஜ்னர் ஆகியோர் கலந்து கொண்டு இந்த அறிக்கையை வெளியிட்டனர்.

2011-மக்கள்தொகை கணக்கெடுப்பு, மத்திய சுகாதார அமைச்சகம் நடத்திய '2017-18 முதியோர் ஆய்வு', இந்திய அரசின் மக்கள் தொகை கணிப்புகள், 'உலக மக்கள் தொகை கணிப்பு 2022' அறிக்கை மற்றும் பிற ஆதாரங்களின் தரவுகளைப் பயன்படுத்தி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களின் விவரம்: கடந்த 2021-ஆம் ஆண்டில், பெரும்பாலான தென் மாநிலங்கள், ஹிமாசலம், பஞ்சாப் ஆகியவை முதியோர் மக்கள்தொகையில் தேசிய சராசரியை விட அதிக பங்கைப் பதிவு செய்துள்ளன. இந்த இடைவெளி வரும் 2036-ஆம் ஆண்டுக்குள் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தவகையில், வரும் 2050-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் மக்கள் தொகையில் 20 சதவீதம் பேர் முதியவர்களாக இருப்பர் என்று கணிக்கப்படுகிறது. 2022-ஆம் ஆண்டு முதல் 2050-ஆம் ஆண்டு வரையில் 80 வயதுக்கும் மேற்பட்டவர்களின் மக்கள்தொகை வளர்ச்சி சுமார் 279 சதவீதமாக இருக்கும்.



## ஏழ்மையில் 40% முதியவர்கள்

தற்போதையசூழலில், இந்தியாவில் உள்ள முதியவர்களில் 40 சதவீதத்துக்கும் அதிகமானோர் ஏழ்மையானவர்களாகவும், அவர்களில் 18.7 சதவீதம் பேர் வருமானம் இல்லாமலும் வாழ்ந்து வருகின்றனர். முதியவர்களின் சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வைப் பற்றிய கவலையை இது எழுப்புகிறது.

## அதிகம் பாதிப்படையும் பெண்கள்

பல்வேறு நாடுகளில் நிலவும் சூழலைப் போன்று இந்திய முதியோர் மக்கள்தொகையிலும் கணவரை இழந்து, மற்றவர்களைச் சார்ந்திருக்கும் வயதான பெண்களின் ஆதிக்கம் அதிமாக இருக்கிறது.

வயதான பெண்கள் கணவர்களை இழந்தவர்களாகவும் வருமானம் இல்லாமலும் அல்லது குறைவான சொத்துக்களுடன் தனியாகவும் ஆதரவுக்காக குடும்பத்தையே முழுமையாகச் சார்ந்திருப்பதால், முதுமையில் வறுமை இயல்பாகவே பெண்களை அதிகம் பாதிக்கிறது.

## ஐ.நா. அறிக்கை வெளியீடு

இந்தியாவில் முதியோர் மக்கள்தொகை அதிகம் எதிர்கொள்ளும் சவாலானது அதில் பெரும்பாலோனார் பெண்களாகவும், கிராமப்புறங்களைச் சார்ந்தவர்களும் இருப்பதே. இதனை மையப்படுத்தி அரசின் கொள்கைகள் வடிவமைக்கப்பட வேண்டும்.

## கோரிக்கை

அறிக்கைக்காக முதியவர்கள் பகிர்ந்த அனுபவங்களின்படி, கரோனா பெருந்தொற்றுபோது முதியோர்களின் தேவைகளுக்கு மத்திய, மாநில அரசு அதிகாரிகளின் பதில்களை மதிப்பாய்வு செய்ததில், பெரும்பாலானவர்கள் அரசு உதவியைப் பெற்றதாக கூறினர்.

ஆனாலும், அந்த உதவி போதுமானதாக இல்லை என்றும், அணுகக் கூடியதாக பொது சுகாதார வசதிகள் இல்லை என்பதும் அவர்களின் குற்றச்சாட்டாக இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு, இனிவரும் காலங்களில் பேரிடர்-மீட்புத் திட்டங்களில் முதியோர்கள் மீது சிறப்பு கவனம் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது.

## வலியுறுத்தல்

இந்தியாவில் முதியோர் தொடர்பான பல்வேறு சிக்கல்களில் நம்பகமான தரவுகள் இல்லை. இனி நடைபெற இருக்கும் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு போன்ற தரவு சேகரிப்பு நடைமுறைகளில் வயதானவர்கள் தொடர்புடைய வளர்ந்து வரும் பிரச்னைகள் குறித்த கேள்விகளுக்குப் பதில்களைச் சேகரிப்பதன் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி முறையான தகவல்களையும் ஒருங்கிணைக்கலாம் என அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முதியோர்களுக்கான திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் அனைத்து முதியோர் இல்லங்களையும் ஒழுங்குமுறை வரம்புக்குள் கொண்டு வருவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு, இயன்றவரை முதியவர்களுக்கு முதுமைக் காலத்தை எளிதாக்க அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று அறிக்கை பரிந்துரைக்கிறது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**